# நாவலரும் சைவசித்தாந்தமும்

கலைவாணி இராமநாதன்

ஈழநாட்டு இந்துக்களது சமயமும் சரி, தத்துவமும் சரி, இந்திய சமயத் தத்துவப் பாரம்பரியத்துடன் நீண்டகாலத் தொடர்புடையதாகவே வளர்ந்து வந்துள்ளது. அறுவகை இந்து தரிசனங்கட்குப்பின் இறுதியாக வைத்தெண்ணப்படும் சைவசித்தாந்தாந்தம் 'தென்னாட்டுச் சித்தாந்தம்', எனச் சிறப்பிக்கப்படும். தென்னிந்தியாவிற்கும் ஈழத்திற்குமுள்ள புராதன காலத் தொடர்புகளின் பயனாக ஈழத்தறிஞர் பலரும் தென்னாடு சென்று தமது தமிழ்ப்புலமை, சமயப்புலமை என்பவற்றை வளர்த்துக்கொண்ட தோடு தத்துவக் கோட்பாடுகளில் சிறந்த பயிற்சியாளராகவும் விளங்கினர். ஏனைய தரிசனங்களைவிட சைவசித்தாந்தத்துடன் ஈழத்தறிஞர்களது நெருக்கமான தொடர்பினதும், பயிற்சியினதும் காரணமாக ஈழத்திலும் சித்தாந்தம் முழுமுதற் கோட்பாடுடைய ஒரு தத்துவமாக வளர்க்கப்படலாயிற்று. நாவலரும் வைதிக சைவ நெறியில் தலைசிறந்து விளங்கியமையினால் சைவசித்தாந்தம் அவரது உயர்வான தத்துவக்கோட்பாடாயிற்று.

சைவசித்தாந்த மரபினை சாஸ்திரக்கோட்பாட்டு முறையிலே முதன் முதல் ஈழத்திலே ஆரம்பித்துவைத்த பெருமை 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநெல்வேலி கமலை ஞானப்பிரகாசரைச் சாரும் (1625—1658). மெய்கண்டசாஸ்திரங்களில் ஒன்றான சிவஞானசித்தியார் பரபக்கத்திற்கு உரை செய்த அறுவருள் ஞானப்பிரகாசரும் ஒருவராவர். இது 'அறுவர் உரை' என்ற பெயரிலே வழங்குகின்றது.[1] இவ்வாறு ஞானப்பிரகாசர் தொடக்கி வைத்த சைவசித்தாந்த மரபானது ஈழத்திலே நாவலர் காலத்தில் நன்கு வேரூன்றியுள்ளது. இத்தகைய ஞானப்பிரகாசர் மரபிலேதான் நாவலரும் தோன்றினர்.[2] நாவலர் தம்முடைய நூல்கள் சிலவற்றிலே ஞானப்பிரகாசர் பற்றிய சில செய்திகளையும் தந்துள்ளார். ''சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் என்னும் திருக்குளம் செய்வித்தவரும், சமஸ்கிருதத்திலே பௌஷ்கராமவிருத்தி, சிவஞானபோதவிருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, பிரசாததீபிகை, சிவயோகசாரம், சிவயோகரத்னம் என்பவைகளையும், சிவஞானசித்தியாருக்கு ஓர் உரையை இயற்றியவரும் திருவண்ணாமலை ஆதீனத் தம்பிரான்களுள் பலருக்குச் சைவாகம உபதேசம் செய்வித்தவருமான ஸ்ரீஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணத்தவர்'' என நாவலர் தமது 'நல்லறிவுச் சுடர் கொளுத்தல்'[3] என்னும் பிரசுரத்தில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இப்படியான தத்துவ ஆசிரிய மரபிலேவந்த நாவலரும் சைவசித்தாந்தக் கோட்பாட்டில் தீவிரமான ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தார். தமது தத்துவக் கொள்கையினையும் சைவசித்தாந்த மரபினை அடித்தளமாக வைத்தே அமைத்துக் கொண்டார். அவரது சித்தாந்தக் கோட்பாட்டின் தீர்க்கமான சிந்தனைகளை நாவலரால் எழுதப்பட்டதும், பதிப்பிக்கப்பட்டதும், உரை செய்யப்பட்டதுமான இன்னோரன்ன பிறநூல்களிலும் கண்டுகொள்ளலாம். மெய்கண்ட சாஸ்திரங்களில் நாவலருக்கிருந்த அறிவாற்றலினாலே

''சைவசமயநெறி'' என்னும் மறைஞானசம்பந்தரது சித்தாந்த நூலுக்கு அவர் புத்துரை ஒன்றினை எழுதிவெளியிட்டார். அத்துடன் மாதவச்சிவ ஞான சுவாமிகள் 'சிவஞானபோதம்' என்னும் நூலுக்கருளிய விருத்தியுரையினையும் பரிசோதித்து வெளியிட்டார்.[4]

தத்துவ சிந்தனை மரபிலே நாவலர் வேதாகம வைதிகநெறியினையே சிறப்பாகக் கடைபிடித்தார். ''வேதத்தின் ஞானகாண்டம், சிவாகமங்களின் ஞானகாண்டம் என்னுமிரண்டும் திரிபதார்த்த லட்சணங்களையே கூறுவன''[5] எனக் குறிப்பிட்டதன்வழி வேதாகமங்கள் முப்பொருள் உண்மையினை அடிப் படையாகக் கொண்டவை என்பதை உறுதிப்படுத்தினர். ஆப்தவாக்கியம் என்னும் பிரமாணத்தில் சைவசித்தாந்தத்திற்கு வேதம் பொதுநூல், ஆக மங்கள் சிறப்புநூல் என்பதனை நாவலர் பின்வருமாறு வலியுறுத்தக் காண லாம்.

> வேதங்கள் அற்பசுருதி வாக்கியம், பிரபலசுருதி வாக்கியமென இருபகுதிப்படும். அற்பசுருதி வாக்கியமும் கர்மானுட்டானங் களையும், பிரபலசுருதி வாக்கியம் அத்தியான்மிக ஞானத்தை யும் சொல்லும். இவை முப்பத்திரண்டு உபநிடதங்களாக இருக் கும், வேதங்கட்கு வழிநூல் சைவம் முதலிய புராணங்களும் ஸ்மி ருதிகளுமாம்''[6]

> ஆகமங்கள் தனித்தனியே ஞானபாதம், யோகபாதம், கிரியா பாதம், சரியாபாதம் என நான்கு பாதங்களையுடையன. அவை பதி, பசு, பாசம் என்னும் திரிபதார்த்தங்களின் ஸ்வரூபம் சிவ யோகம் ... சந்தியாவந்தனம் ... பூசை, செபம், ஓமம் முதலிய ஆச்சார்ய அபிசேகங்களையும் உபதேசிக்கும்''.[7]

நாவலரது இந்த விக்கியாபனம் 'ஸ்ரீ வேதாகமோக்த சித்தாந்த சைவப் பிரகாச சமாசிய விக்கியாபனம்' எனப்படும்.[8]

நாவலரது சித்தாந்த மரபு வேத சிவாகம சித்தாந்தமாக அமைந்தி ருந்ததென்பதை பண்டிதமணி அவர்களும்,

> ''வைதிகமானது தூய அறிவுநெறி. அது சிவ சம்பந்தம் உறும் போது சைவம் என்பதால்... நாவலர் சரித்திரத்தை அவ்வாறு கூறுகிறேம்''[9]

என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து புலனகும்: இதிலிருந்து சைவசித்தாந்தத் திலே வேதமரபின் தொன்மை ஏற்புடைத்து என்பது தெளிவாகும். நாவல ரால் எழுதப்பட்ட சைவவினவிடை – இரண்டாம் புத்தகம் அமைப்பு முறை சிவஞானபோத அமைப்பு முறையை ஒத்துள்ளது எனலாம். சிவ ஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களில் சொல்கின்ற தத்துவக்கோட் பாட்டினை நாவலரது நூலானது வினவிடை அமைப்பிலே சுருக்கமாகச் சொல்கின்றது. பதிஇயல், பசுஇயல், பாசஇயல் என்னும் முறையிலே அவ ரது நூலமைப்புத் தொடர்கின்றது.

''சங்கார காரணனை உள்ளமுதலே முதலாக
உடையது இவ்வுலகம்'' 10

என்னும் சிவஞானபோதச் சூத்திரத்தின் பொருளை அவ்வாறே அடியொற்றி 'உலகத்திற்குக் கருத்தா சிவபெருமான்' என்று சுட்டுகின்றார்.11

ஆன்மாக்கள் பல, அவை பாசத்தால் பந்திக்கப்பட்டவை என்ற கொள்கைகளும் மெய்கண்டசாஸ்திர விதிகட்கமைய விளக்கப்படுகின்றன.12 பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் பற்றிய உண்மைகள் நாவலரது ஆக்கங்கள் பலவற்றிலும் பலகோணங்களில் பரவிக்கிடப்பதைக் காண லாம். இவ்வாறாக சைவசித்தாந்தக் கோட்பாட்டை இலகுவாகவும், எளிமையாகவும் ஈழத்திலே முதன்முதல் வசனரூபமாக விளக்கிய பெருமை நாவலரையே சாரும்.

''கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பது புறஇந்திரியங்களால் அறியப் படாவிட்டாலும் அனுமானப்பிரமாணத்தால் நிச்சயிக்கப்படும்''13 என றிவ்வாறு அனுமானப் பிரமாணத்தின் பயன்பாடும் எடுத்துக்காட்டப்பட் டுள்ளது. சைவசித்தாந்தத்தின் முழுமுதற் கடவுளெனப்படும் 'சிவம்' 'பசு', 'பதி' என்னும் கொள்கையினை

''எல்லா அறிவும், எல்லா முதன்மையும், எல்லா அனுக்கிரகமும் உடைய முழுமுதற் கடவுள் தாம் ஒருவரேயாய்ப் பசுக்களாகிய ஆன்மாக்கள் எல்லாம் தமக்கு உடைமைப் பொருட்களேயாகத் தாம் என்றும் உடை யவராயே நின்று 'பசுபதி' எனப்படும் சிவன் பிரபஞ்சம் எங்குமாகி நீக்கமற வியாபித்து நிற்பர்''.14

என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவனின் பதி இலக்கணமாவது

''சிவன் அருவுரு ஒன்றுமல்லன் சித்தினோடசித்துமல்லன் பவமுதற் தொழில்கள் பண்ணிடுவானுமல்லன்............

இவைபெற இயைந்தும் என்றும் இயந்திடா இயல்பினன்''15

என்பது சிவஞானசித்தியார் பாடலாகும். இப்பெற்றிவாய்ந்த முழுமுதற் கொள்கையில் கிறிஸ்தவர்களும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்ற குறிப்பினை நாவலர்,

''பதி இலக்கணம் பைபிளிலே எங்கே சொல்லியிருக்கின்றது. சைவ ருடைய சிவஞான சித்தியாரைப் பார்த்தாலன்றோ பதி இலக்க ணம் இனிது விளங்கும்''16

என ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் வாய்மொழியாக எடுத்துக்காட்டுகிறார். இந்தளவிற்கு நாவலர் காலம் சைவசித்தாந்த மரபானது யாழ்ப்பாணத்தில் வேரூன்றியிருந்தது என்பதற்கு இக்கூற்று நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

பாசங்கள் எனப்படும் மயாமல காரியங்கள் பற்றியும், ஆன்மாக்களது இருவினைகள், கன்மம், மறுபிறவி பற்றியும் நாவலரது நூல்கள் சித்தாந்த நூல்களின் கோட்பாடுகளைத் தெளிவாக விளக்கியுள்ளதைக் காணலாம்.17

அத்துடன் குறிப்பாக நாவலர் பாடசாலைக்கெழுதிய பாடநூல்கள் அனைத்திலும் மாணவர்கட்குச் சித்தாந்த அறிவினைப் புகட்டுமுகமாகச் சமயக் கோட்பாடுகளையும், தத்துவக் கருத்துக்களையும் இலகுவான வசனநடையிலே பாலபாடமாகவும், சைவவினாவிடைகளாகவும் உருவாக்கினர். இவற்றிலெல்லாம் வேதசிவாகமக் கோட்பாடுகளை விளக்குவதே இவரது முக்கிய குறிக்கோளாயிற்று.[18] சைவசித்தாந்தக் கோட்பாடுகளை வேதசிவாகமங்களின் அடிப்படையிலே கற்பிக்கவிரும்பிய நாவலர் சிதம்பரத்திலே ஒரு 'வேதாகம பாடசாலை' யினையும், சைவமடத்தையும் நிறுவ முயற்சித்தார்'

> "சமயசாத்திரக் கல்வி தகுந்த முறையிலே போதிக்கப்படாமல் இருந்து வருவது குறித்தே நாவலர் இவ்வாறு வேதாகம பாடசாலையினை நிறுவமுயன்றுள்ளார்."[19]

என்னும் நாவலர் கருத்தினை தனஞ்ஜெயராஜசிங்கம் அவர்களும் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சைவ சித்தாந்த மரபினை ஈழத்திலே நிலைபெறச் செய்யும் முயற்சியிலே சைவசமயம் சார்ந்த நூல்கள் அனைத்தையும் நாவலர் பயன்படுத்தினர். வேத சிவாகமங்களை மட்டுமன்றி உபநிடதங்களின் கருத்தை வற் புறுத்துமிடங்களிலும்,

> "சிவனைப் பிண்டசரீரத்தினது இதயக்கமலத்தில் தியானித்துத், தரிசித்துப், பாசம் நீங்கி முத்தி அடைவதே ஆன்ம (தகர) வித்தையாகும்"[20]

எனச் சாந்தோக்கியம், கைவல்யம் போன்ற உபநிடதங்களிலிருந்து மேற் கோள் காட்டினர். உபநிடதக்கொள்கைகளை விரித்து 'உபநிடத மூலமும் உரையும்' என்ற நூலினைப் பதிப்பித்தார். தருக்க சங்கிரகம், உபமான சங்கிரகம், பிரயோக விவேக உரை என்னும் தர்க்க நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்ததன் வழியாகத் தர்க்கரீதியான தத்துவச் சிந்தனைகள் ஈழநாட்டிலே பிற்காலம் வளர்ச்சி பெறுவதற்கும் அவர் அடிகோலினர்.

தேவாரம், திருவாசகம், ஸ்மிருதிகள், இதிகாசம், கந்தபுராணம், பெரியபுராணம், அப்பைய தீட்சிதர் பத்ததி, சிவாகமங்கள், மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலிய நூல்களில் இடம்பெற்ற சித்தாந்தக் கோட்பாடுகள், முப்பொருள் பற்றிய விளக்கங்கள் யாவும் நாவலரது உரை நூல்களிலும், கண்டன நூல்களிலும், சுய நூலாக்கங்களிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன.[21] இவற்றுள் 'சுப்பிரபோதம்' என்னும் கண்டனப் பிரசுரம் ஒன்றிலே சிவசக்தி தத்துவம் பற்றியும்,[22] திருவிளையாடல்புராண வசனம், திருத்தொண்டர்புராணவசனம், என்ற நூல்களிலே பதியிலக்கணம் பற்றியும், சைவதூஷணபரிகாரம் என்ற நூலிலே பதிப்பிரகரணம் பற்றியும் மெய்கண்டசாத்திரங்களின் சித்தாந்தக் கோட்பாடுகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.[23]

யாழ்ப்பாணத்திலே மட்டுமன்றித் தென்னகத்திலும் நாவலர் நிகழ்த்திய பிரசங்கங்கள் பல சைவசித்தாந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நிகழ்த்தப்பட்டன. அவற்றிலே மதுரை மீனாட்சி

யம்மை சன்னிதானத்திலும், திருவண்ணாமலை ஆதீனத்திலும், திருவாவடுதுறை ஆதீனத்திலும் நடத்தப்பட்ட பிரசங்கங்கள் குறிப்பிடத்தக்கவை.[24] திருக்கோயில் திருப்பணிகளைப் பற்றிக் குறிப்பிடும்போதும் சித்தாந்த நூற் பிரமாணவிதிகளை விளக்கிக்காட்டினார். இதனைத்

> ''திருப்பணி செய்வாரும் சிவனையுன்னிச் செம்பொன்
> விருப்புடன் ஈவார் பெறுகவீடு''[25]

என எடுத்துரைத்தமை சைவமக்கட்கும், சித்தாந்த அறிஞர்க்கும் பிற்காலம் வழிகாட்டுவதாக அமைந்தது.

ஈழநாட்டிலே வாழ்கின்ற இந்துக்களது தத்துவச்சிந்தனை மரபு சைவசித்தாந்தம் என்பது வெளிப்படை. ஈழத்திலே இச்சித்தாந்தமரபின் தொன்மைபற்றிக் கணிப்பது கடினமுயற்சியாகும். எனினும் கி. பி. 16ஆம் நூற்றுண்டிலிருந்து சைவசமயம் காட்டும் சித்தாந்தக் கோட்பாடு வளர்ச்சியடைவதற்கு ஞானப்பிரகாசர் போட்டுவைத்த விதையானது நாவலர் மூலமாகப் பாரிய சித்தாந்த விருட்சமாக ஈழத்திலே வளர்ச்சியடைந்து உள்ளது. நாவலர் சமயத்துறையிலே மட்டுமன்றித் தத்துவமரபிலும் பழமையைப் பேணும் சிந்தனையாளராகவே விளங்குகின்றார்.

இப்பழமைபேணும் மரபு நாவலரது நூலாக்கங்கள் பலவற்றிலும் வழிவழி பேணப்பட்டு வந்துள்ளமையினை எங்கும் காணலாம். அவரது படைப்புக்களில் - பதிப்புக்களில் – மற்றும் பிறவற்றிலே எல்லாம் நாவலரது தத்துவ மரபின் கருத்தோட்டத்தை – ஆளுமையினைக் காண்கின்ற வேளையிலே, அவற்றில் மாற்றம், புதுமை என்பவற்றைவிட அம்மரபினை ஈழத்திலே உள்ளபடியே கட்டிக்காப்பதிலேயே நாவலர் அதிக கவனம் செலுத்தியுள்ளார் என்பது புலனாகின்றது. காரணம் அவர் வாழ்ந்தகாலச் சூழ்நிலை அத்தகையதொரு தேவையினை அவருக்குத் தோற்றுவித்திருந்தது ஆகும். தமது சித்தாந்தக்கோட்பாட்டின் மூலமாகத் தம்முடைய மாணவர் பரம்பரையினரிடையே புதியதொரு விழிபுணர்வைத் தோற்றுவிப்பதற்கு அவரது கருத்துக்கள் மிகவும் தூண்டுகோலாக அமைந்தன.

அதன் விளைவாகப் பிற்காலத்தில் ஆராய்ச்சி நூலான சிவஞானபாடியத்துடன் ஈழத்தறிஞர்கட்கு நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பு உண்டானது. இத்துறையிலே சிறப்பாகக் கூறத்தக்கவருள் சபாபதிநாவலரையும், இலக்கணம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரானையும் குறிப்பிடலாம். முன்னையவர் பாடியதைப் பதிப்பிக்கும் முயற்சியிலே ஈடுபட்டபோதும், அம்முயற்சியில் வெற்றிகண்டவர் இலக்கணச்சுவாமிகள் ஆவார். சிவஞானபாடியம் முழுமையையும் அச்சிட்டுப் பதிப்பித்த[26] பெருமை அவரையே சாரும். அத்துடன் சிவாக்கிரக யோகிகளது கிரியா தீபிகை, சைவசன்னியாசபத்ததி, முத்திநிச்சயம் போன்ற நூல்களையும் பரிசோதித்துதவினார். பாடியத்தின் ஒருபகுதியை வண்ணார்பண்ணைச் சுவாமிநாதபண்டிதர் என்பாரும் பதிப்பித்து வெளியிட்டார்.

இப்படியாக நாவலரால் கட்டிவளர்கப்பட்ட சைவசித்தாந்த மரபானது காசிவாசி செந்திநாதையர் அவர்களால் ஈழத்திலே மேலும் மெருகேற்

றப்பட்டது. 'சைவசித்தாந்த ஞானபானு', 'சித்தாந்த சிகாமணி' எனப் பல சிறப்புப் பெயர்களால் புகழப்பட்ட ஐயரவர்களின் நூலாக்கங்களில் குறிப்பிடத்தக்கது நீலகண்டபாஷ்ய உரையாகும். இது நீலகண்டசிவாச் சாரியாரால் பிரமசூத்திரத்திற்குச் சித்தாந்த மரபாகச் செய்யப்பட்ட பாடியத்திற்குத் தமிழில் எழுதப்பட்ட முதல் உரை இதுவாகும். இவ் வுரைநூல் 1907 இல் வெளிவந்தது.27 இதுதவிரச் சைவ வேதாந்தம், தேவா ரம் வேதசாரசாரம் என்பன போன்ற சித்தாந்த நூல்களும் ஐயரவர்களால் எழுதப்பட்டன.

வேதாந்தக் கொள்கை பற்றிய தெளிவான விளக்கமற்ற அக்காலத்தில்,

"வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன்"28

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளின் கருத்தினை முதன்முதல் ஈழத்தவ ரிடையே எடுத்துக்காட்டிய பெருமை செந்திநாதையரையே சாரும்.

> "உலகப்படைப்பிற்கு முதற்காணம் பிரருமல்ல, பிரமமுமல்ல, சிவம் பிறிதொன்றன் மூலமே உலகிற்குக் காரணமாகின்றுர். ஆத லால் பிரபஞ்சகாரணனை சிவப்பிரமம் அனைத்திற்கும் மேலான வன்"29

இது சைவசித்தாந்தத்தின் முழுமுதல் 'பரப்பிரமசிவம்' என்னும் கருத்தினை வலியுறுத்துவதாக உள்ளது. வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களை ஒரு மைப்படுத்தி விளக்கம்காண ஐயரவர்கள் விழைந்துள்ளமை புலனாகின்றது.

> "அது சுயமே பராத்பரமாயும் சுத்தமாயும் இருத்தலிற் சிவம் எனப்படும். மேன்மையினாலும் பேருருவம் உடைமையினாலும் பிர மம் எனப்படும்"30

என்ற கூற்று இக் கருத்தினைப் புலப்படுத்தும். இதனால் சித்தாந்தத்தின் சிறப்பு தெளிவாகவும், உயர்வாகவும் வரையறை செய்யப்பட்ட தன் மையை அடைந்தது. ஆகவே

> "இவையனைத்தின் மூலமும் மாயாவாத மயக்கமறுத்துச் சித்தாந்த மரபை வேதோபநிடத புராணேதிகாச பரமாக நிலைநாட்டுதல் இச் சைவ வேதாந்த நூற்பயனாகும்"31

என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது. ஈழத்துச் சைவசித்தாந்த கோட் பாட்டு வளர்ச்சியில் செந்திநாதையர் காலம் ஒரு புதியவார்ப்பாக அமைந் தது. நாவலரைப் பின்பற்றி வைதிக சைவநெறியினையே ஐயர்வர்களும் பின்பற்றினர் என்பதற்குத் 'தேவாரம் வேதசாரம்' என்ற நூலும் சிறந்த எடுத்துக்காட்டாகும். அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், நீர்வேலி சங்கர பண்டிதர் போன்ற இன்னும் பலரும் ஈழத்திலே சைவசித்தாந்த வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுள்ளனர் எனலாம்.

இப்படியாகத் தனது இலட்சியம், கொள்கை, குறிக்கோள் என்பன வற்றைப் பின்பற்றி வாழநினைத்த அனேகருக்கு நாவலர் ஒரு முன்னோடி யாகவும், வழிகாட்டியாகவும் விளங்கினர்.

''நாவலர் வரலாற்றுப் பெருமகன். 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் சமுதாயத்திற்கு அவசியமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற் றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக்கருமங்கள் பிறருக்கு ஆதர்ச மாயமைந்தன.''32

என்ற கூற்றனது பிற்காலம் பல அறிஞர்கட்கு நாவலர் ஒரு ஆதர்சபுரு சராக விளங்கியமையினைப் புலப்படுத்துகின்றது.

இன்றும் ஆறுமுகநாவலரது மாணவ பரம்பரையினரின் தொடர்ச்சி யாகவும், வளர்ச்சியாகவும் வாழ்ந்துகொண்டிருப்பவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி அவர்களாவர். அன்னாரது 'சமயக் கட்டுரைகள்' என்னும் நூலானது சித்தாந்தக் கோட்பாடுகளை இலகுவாக விளங்கவைக்கும் பெற்றி வாய்ந்ததாம். இதன்வழி ஈழநாட்டிலே – யாழ்ப்பாணத்திலே சைவசித் தாந்த மரபினை சாஸ்திரநூல்களின் விதிப்படி அறிமுகப்படுத்தி – அத்தத் துவத்தினை மரபிற்கமைய வளர்த்துக்கொடுத்த பணியிலே ஆறுமுகநாவலர் பெருமானின் பங்களிப்பும், சேவையும் தலையாய ஒன்றெனலாம்.

---

## அடிக் குறிப்புகள்

1. சிவஞானசித்தியார் அறுவர் உரை. சென்னை, சிவஞானபோத யந் திரசாலை. பக், 5 – 8.
2. கனகரட்ண உபாத்தியாயர், வே. ஆறுமுகநாவலர் சரித்திரம், யாழ்ப் பாணம், 1968. பக் 1 - 2.
3. கைலாசபிள்ளை, த. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, சென்னை, 1954. பக். 125.
4. கனகரட்ண உபாத்தியாயர், வே. மு - கு - நூ பக் 32.
5. ஆறுமுகநாவலர், க. சைவசமயநெறி, 8ஆம் பதிப்பு, சென்னை, 1955. பக். 31.
6. ஆறுமுகநாவலர், க. சைவதூஷணபரிகாரம், சென்னை, 1956, பக். 2.
7. ஆறுமுகநாவலர், க. மு – கு - நூ பக். 3.
8. ஆறுமுகநாவலர், க. மு - கு - நூ பக். 1.
9. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி. ஆறுமுகநாவலர். நாவலர் நூற் றாண்டு நினைவு மஞ்சரி, சாவகச்சேரி. 1979, பக். 64.
10. ஆறுமுகநாவலர், க. சிவஞானபோதம் - சிற்றுரை, 4 ஆம் பதிப்பு. சென்னை. சூத்திரம் 2.

11. ஆறுமுகநாவலர், க. சைவவினாவிடை - இரண்டாம் புத்தகம், சென்னை, 1970. பக். 1.

12 ஆறுமுகநாவலர். க, சைவவினாவிடை, பக். 10, 11.

13 ஆறுமுகநாவலர், க. நான்காம் பாலபாடம், சென்னை, 1950. பக். 231.

14 ஆறுமுகநாவலர், க. சிதம்பர மான்மியம், சென்னை, 1957. பக். 1.

15. திருவிளங்கம், மு. (புத்துரை), சிவஞானசித்தியார், யாழ்ப்பாணம், கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 1971. பதியிலக்கணம், பக். 90.

16. கைலாசபிள்ளை, த. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, பக். 75.

17. ஆறுமுகநாவலர், க. நான்காம் பாலபாடம், பக். 234 – 235.
ஆறுமுகநாவலர், க. சைவவினாவிடை இரண்டாம் புத்தகம், பக். 11 – 13.

18. தனஞ்செயராஜசிங்கம், செ. நாவலர் பணிகள், பேராதனை, 1969, பக். 71.

19. தனஞ்செயராயசிங்கம், செ, மு - கு - நா பக். 29.

20. ஆறுமுகநாவலர், க. சிதம்பரமான்மியம் பக். 5.

21. ஆறுமுகநாவலர், க. சைவதூஷணபரிகாரம் பக். 6 – 10.

22. கைலாசபிள்ளை, த. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, பக். 5.

23. ஆறுமுகநாவலர், க. திருவிளையாடற்புராணவசனம், சென்னை, 1959, பக். 9.

திருத்தொண்டர் பெரியபுராண வசனம் சென்னை, 1954, பக். 2 - 3.

24. கனகரட்ண உபாத்தியாயர், சே. மு - கு - நா பக். 59, 61, 63.

25. ஆறுமுகநாவலர், க. சைவசமயநெறி பாயிரம். பக். எண் 21.

26. ஸ்ரீ சானசிவாசாரியார், இலக்கணச் சுவாமிகள் என்னும் ஸ்ரீமுத்துக்குமாரத் தம்பிரான் நினைவுமலர், யாழ்ப்பாணம், 1958, பக். 31 - 32.

27. கணபதிப்பிள்ளை, சி. மகான் செந்திநாதையர். காசிவாசி செந்திநாதையர், குப்பிளான், செந்திநாதையர் ஞபகார்த்தசபை, 1978. பக். 9.

28. திருவிளங்கம், மு. (உரை) சிவப்பிரகாசம், யாழ்ப்பாணம், கூட்டுறவுத்தமிழ்நூற் பதிப்பு விற்பனைக்கழகம், 1974, பாயிரம். பக். 7.

29. ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார். சிவாத்துவிதசைவபாடியம், தமிழாக்கம் காசிவாசி செந்திநாதையர், பிலவங்க வருடம், 1901. பக். 198.

30. செந்திநாதையர், காசிவாசி. சைவவேதாந்தம், மதுரை, ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சகம், 1920. பக். 88.

31. கந்தையா, மு. சைவவேதாந்தம் தந்த தெய்வீக ஞானபானு. காசிவாசி செந்திநாதையர் மலர், பக். 31.

32. கைலாசபதி, க. நாவலர் வகுத்த புதுப்பாதை, நாவலர் மகாநாட்டு விழா மலர், 1969. பக். 19.